நாங்கள் வீட்டில் சுவிஸ் ஜரெ்மன் அல்லது ஹை ஜரெ்மன் மொழியில் தான் பசேுகிறோம். நாங்கள் ஏன் கேள்வித்தாளை நிரப்ப வணே்டும்?

குழந்தைகள் தங்களுக்குரிய பாணியில் வளர்ச்சியடைகிறார்கள் இந்த ஆய்வு உங்கள் குழந்தைக்கு உபயோகமாக இருக்கும்.

நாங்கள் ஏற்கனவே கடந்த ஆண்டு ஒரு கேள்வித்தாளைப் பெற்றோம். ஏன் நாங்கள் அதை மீண்டும் நிரப்ப வணே்டும்?

கடந்த ஆண்டிலிருந்து உங்கள் குழந்தை மொழித் திறன்களில் அடைந்துள்ள முன்னேற்றத்தை நீங்கள் காணலாம். உங்கள் குழந்தையின் சரியான மொழித்திறன் நிலைப் பற்றி எங்களுக்குத் தெரிந்தால், உங்கள் குழந்தைக்கு சிறந்த ஆதரவை வழங்க முடியும்.

என் குழந்தையின் சரியான மொழித்திறன் அளவு பற்றி எனக்குத் தெரிவிப்பீர்களா?

ஆம். கேள்வித்தாளின் முடிவில் உங்கள் குழந்தையின் தேர்வு முடிவுகளை மின்னஞ்சல் மூலம் பெற விரும்புகிறீர்களா என்பதை நீங்கள் டிக் செய்யலாம்.

எனது குழந்தை பாலர் பள்ளியில் (Kindergarten) சுவிஸ் ஜெர்மன் அல்லது ஹை ஜெர்மன் மொழி பேச வேண்டுமா?

இல்லை உங்கள் குழந்தை ஜெர்மன் பேச வேண்டிய அவசியமில்லை. இருப்பினும், பாலர் பள்ளி (Kindergarten) ஆசிரியர் அவரைப் புரிந்துகொள்வதும், அவரது தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆசிரியருடன் உரையாடுவதும் அவசியம்.

நான் என் குழந்தையுடன் எனது தாய்மொழி அல்லது தந்தை மொழியில் பேச வேண்டுமா?

ஆம். குழந்தைகள் தங்கள் தாய்மொழி அல்லது தந்தை மொழியைக் கற்றுக்கொள்வது மிகவும் முக்கியம். உங்கள் குழந்தை பாலர் பள்ளி (Kindergarten) மற்றும் பள்ளியில் ஜெர்மன் மொழியை விரைவாகக் கற்றுக்கொள்வார்.

இந்த சர்வேயில் கட்டாயமாக பங்கு பெற வேண்டுமா?

இல்லை இதில் பெரும்பாலான குடும்பங்கள் பங்கேற்று பயன்பெறுகின்றன.

பாலர் பள்ளி (Kindergarten) பிளேஸ்மெண்ட்டுக்கு ஆரம்பகால குழந்தை பருவப் பிரிவு (Fachstelle Frühe Kindheit) தான் பொறுப்பேற்கிறதா?

இல்லை மேற்பார்வை பள்ளி ஆணையம் (Schulamt) தான் பாலர் பள்ளி (Kindergarten) பிரிவை கையாளுகிறது.

ஆரம்பகால குழந்தை பருவப் பிரிவு (Fachstelle Frühe Kindheit) இந்த தரவுகளைக் கொண்டு என்ன செய்யும்?

புள்ளிவிபர நோக்கங்களுக்காகவும், மழலையர் சேவைகளை உருவாக்குவதற்கும் இந்த தரவுகள் தேவைப்படுகின்றன.

இந்த தரவுகளை வைத்து பள்ளி ஆணையம் (Schulamt) என்ன செய்கிறது?

உங்கள் குழந்தையின் மொழித்திறன் நிலை குறித்து பள்ளி ஆணையம் (Schulamt) ஆசிரியர்களுக்குத் தெரிவிக்கும். இதனால் ஆசிரியர்கள் உங்கள் குழந்தையை பாலர் பள்ளியில் (Kindergarten) சிறப்பாக ஆதரிக்க முடியும்.

Fachstelle Frühe Kindheit Stadt Schaffhausen
**www.fk-stsh.ch**

STADT SCHAFFHAUSEN